செ.வெ.எண்:80 / செப்டம்பர்/2020 நாள்:24.09.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விவசாயிகளுக்கான நீர்பாசன கடன், தனிநபர் கடன், சிறுகடன், கல்விக்கடன், கறவை மாடு, ஆட்டோ கடன் ஆகியவற்றிற்கு பொருளாதார மேம்பாட்டுக் கடன் (லோன் மேளா) வருகின்ற 28.09.2020 முதல் 16.10.2020 வரை அந்தந்த வட்டங்களில் நடைபெறவுள்ளது. தகுதியானவர்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

-----------------------

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்(டாம்கோ) மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (டாப்செட்கோ) மூலம் செயல்படுத்தப்படும் கடன் திட்டங்களான தனி நபர் கடன் திட்டம், சுய உதவிக்குழுக்களுக்கான சிறு கடன் திட்டம், கல்வி கடன் திட்டம், கறவை மாடு கடன் திட்டம், ஆட்டோ கடன் திட்டம் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபனர் விவசாயிகளுக்கான நீர்பாசன கடன் ஆகிய திட்டங்களுக்கான கடன் வழங்கும் சிறப்பு முகாம்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கீழ்கண்ட விபரப்படி நடைபெறவுள்ளது.

| தேதி | வட்டம் | லோன் மேளா நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|
| 28.09.2020 | திருச்சிராப்பள்ளி கிழக்கு | வரகனேரி நகர கூட்டுறவு வங்கி |
| 29.09.2020 | திருச்சிராப்பள்ளி மேற்கு | திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கருமண்டபம் கிளை |
| 30.09.2020 | திருச்சிராப்பள்ளி மேற்கு | திருச்சிராப்பள்ளி நகர கூட்டுறவு வங்கி |
| 01.10.2020 | திருவெறும்பூர் | துவாக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |
| 05.10.2020 | திருச்சிராப்பள்ளி கிழக்கு | திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சுப்பிரமணியபுரம் கிளை |
| 06.10.2020 | இலால்குடி | புள்ளம்பாடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |
| 07.10.2020 | இலால்குடி | திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இலால்குடி கிளை |
| 08.10.2020 | மண்ணச்சநல்லூர் | மண்ணச்சநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |
| 09.10.2020 | மணப்பாறை | புத்தாநத்தம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |
| 12.10.2020 | மருங்காபுரி | துவரங்குறிச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |
| 13.10.2020 | தொட்டியம் | திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துறையூர் கிளை |
| 14.10.2020 | முசிறி | முசிறி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |
| 15.10.2020 | தொட்டியம் | கொளக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |
| 16.10.2020 | ஸ்ரீரங்கம் | ஸ்ரீரங்கம் நகர கூட்டுறவு வங்கி |

டாம்கோ மற்றும் டாப்செட்கோ கடனுதவி திட்டங்களுக்கு விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும் 60 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும். மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, நகர கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் செயல்படுத்தப்படும். புதிய தொழில், ஏற்கனவே செய்து வரும் தொழிலை விரிவாக்கம் செய்ய கடனுதவி பெற விண்ணப்பிக்கலாம் எனவும், மாவட்டத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மேற்படி சிறப்பு முகாம்களில் கலந்து கொண்டு மேற்படி கடன் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கலாம். கல்வி கடனுக்கு விண்ணப்பிக்கும் போது பள்ளி மாற்று சான்றிதழ் மற்றும் உண்மைச் சான்றிதழ் (Bonafide Certificate) ஆகிய ஆவணங்களின் ஒளிப்பட நகல்களையும்

சமாப்பிக்க வேண்டும். விவசாயிகளுக்கான நீர்பாசன கடன் பெற விண்ணப்பதாரர் சிறுகுறு விவசாயி என்பதற்கான சான்றினை சம்மந்தப்பட்ட வட்டாட்சியரிடமிருந்து பெற்று வழங்க வேண்டும்.

இது தொடர்பான கூடுதல் விபரங்களுக்கு இணைப்பதிவாளர்(கூட்டுறவு சங்கங்கள்) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, நகர கூட்டுறவு வங்கி அலுவலர்களை அணுகி பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**